Regitered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04

விலை ரூபா: 3-00

# ஈழநாதம்

THE EELANAATHAM *Peoples Daily* மக்கள் திசைரி

நாதம் 01 பிரமோதூத ஹூ ஆவணி மீ 07 ஆம் உ வியாழக்கிழமை (23 - 08 - 1990) ஹிஜ்ரி 1410 ஸபர் 2 ஓசை 186

## "கரடி" விற்கும் சிங்கக் கொடி

(வவுனியா)

வவுனியா நகரத்தில் பொதுமக்களை வற்புறுத்தி ஸ்ரீலங்காவின் தேசியக்கொடி விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

வவுனியா குளப்பகுதியிலிருந்து கோயில்குளம் செல்லும் வழியில் அமைக்கப்பட்டுள்ள காவல் அரணைத் தாண்டிச் செல்லும்போது இராணுவத்தினரால் நியமிக்கப்பட்ட சிங்களவர் (4ஆம் பக்கம் பார்க்க)

# ஊர்காவற்றுறையில் இறக்கிய இராணுவம் புலிகள் மோதல்!

## குடாநாட்டில் குண்டுவீச்சுக்குப் பலர் பலி!

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை இறங்குதுறையில் நேற்றுக் காலை சிறிலங்கா விமானப் படையின் ஹெலிக்கொப்ரர்களில் கொண்டு வந்து இறக்கப்பட்ட சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் சண்டை மூண்டது. மறுமுனையில் காரைநகர் கடற்படை முகாமில் இருந்து வெளியேறிய கடற்படையினருக்கும் புலிகளுக்கும் கடும் மோதல் ஏற்பட்டது. இந்த மோதல்களில் சிறிலங்கா இராணுவத்திற்கு ஏற்பட்ட இழப்புக்கள் பற்றிய விபரம் தெரியவில்லை. விடுதலைப் புலிகள் இருவர் வீரமரணமடைந்தனர். இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை தொடர்ந்து சண்டை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விமானப்படை விமானங்களும் ஹெலிக்கொப்ரர்களும் குண்டுவீசித்தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கின்றன.

யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் நேற்று முற்பகல் முதல் காலவரையற்ற ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளதாக சிறிலங்கா விமானப்படை விமானங்கள் வானிலிருந்து துண்டுப்பிரசுரங்கள் வீசியதாகப் பொது மக்கள் மத்தியில் பரவலாகப் பேசப்பட்ட போதிலும் துண்டுப் பிரசுரங்கள் கிடைப்பதற்கும் 'ஊரடங்கு உத்தரவு வானிலிருந்து'' பிறப்பிக்கப் படுவதற்கும் முன்னரே நேற்று அதிகாலை ஐந்தரை மணிக்கே யாழ்ப்பாணத்தில் வானில் இருந்து குண்டுகள் வீசப்படத் தொடங்கிவிட்டன.

நேற்று அதிகாலையில் யாழ். குடாநாட்டில் ஆரம்பமான குண்டுவீச்சும் ஹெலிக்கொப்ரர் துப்பாக்கிப் பிரயோகமும் நேற்று மாலையிலும் இரவிலும் தொடர்ந்துகொண்டு இருந்தன.

நேற்று அதிகாலை ஐந்தரை மணிமுதல் யாழ். குடாநாட்டில் யாழ். நகரம், வட்டுக்கோட்டை பண்டத்தரிப்பு, மானிப்பாய், காரைநகர், திருநெல்வேலி, கோப்பாய், சாவகச்சேரி முதலிய பலஇடங்களி (4ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் அகதிகளுக்கு 20,000 வீடுகள்

(சென்னை)

இலங்கையிலிருந்துவந்துள்ள தமிழ் அகதிகளுக்கு எட்டுக் கோடிரூபா செலவில் இருபதாயிரம் வீடுகள் அமைத்துக் கொடுக்க இருப்பதாக தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி நேற்று சட்டசபையில் தெரிவித்தார்.

## விமானத் தாக்குதலுக்கு 7 பொதுமக்கள் பலி; பலர்காயம்

(யாழ்ப்பாணம்)

நேற்று யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதியிலும் ஏற்பட்ட விமானத் தாக்குதலில் ஏழுக்கு மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டார்கள். இதில் வவுனியாவில் இருந்து வந்த வானின் மீது ஹெலிக்கொப்டர் இயக்கச்சியில் வைத்து மேற்கொண்ட தாக்குதலில் நால்வர் கொல்லப்பட்டனர். நால்வர் காயமடைந்தனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் என சிங்களவரை சுட்டுக் கொன்றது இராணுவம்

(வவுனியா)

வவுனியா நகரப் பகுதியில் இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் சிங்களவர் ஒருவர் கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் கடந்த 18 ஆம் திகதி இரவு இடம் பெற்றது.

சம்பவதினம் மூன்று சிங்களவர்கள் கோவில்குளம் பகுதியில் உள்ள அரிசி ஆலைகளில் கொள்ளையில் ஈடுபட முயன்றபோது இராணுவத்தினர் ஒருவரை சுட்டுக்கொலை செய்தனர். மேலும் இருவரை கைது செய்தனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## சிப்பாய் பலி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு முகாமுக்குள் இருந்த இராணுவத்தினர்மீது விடுதலைப்புலிகள் குறிபார்த்துச் சுட்டதில் ஒரு இராணுவத்தினர் மரணமானார்.

## இருவர் வீரமரணம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்துறையில் நேற்று சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற கடும் மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் இருவர் வீரமரணமடைந்துள்ளனர்.

நிசாந்தன், காந்தன் ஆகிய இருவருமே இம்மோதலில் வீரமரணமடைந்தவர்கள். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர அஞ்சலியைத் தெரிவித்துள்ளனர். (ம)

## திருமலையில் தமிழ் மக்கள் கைது தொடர்கிறது

(திருக்கோணமலை)

திருமலையில் தமிழர்கள் ஸ்ரீலங்கா ராணுவத்தினரால் கைது செய்யப்படுவது தொடர்ந்து நடைபெற்று வருகிறது அகதிகள், விவசாயிகள் ஆகியோரும் கூட கைது செய்யப்படுகின்றனர்.

கடந்த 9 ஆம் திகதி பன்குளத்தில் நான்கு தமிழ்க் குடும்பங்களைப்பிடித்த ராணுவத்தினர் அவர்களை பன்குளம் தேவாலயத்தில் கைதிகளாக வைத்துள்ளனர்.

கடந்த 18 ஆம் திகதியன்று தம்பலகாமம் அகதி முகாமிலிருந்து இராசையா பாலச்சந்திரன் – 98 ஆம் கொலனி, காளியப்பு இராசதுரை தம் (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஈராக்கின் சமாதான அழைப்பை அமெரிக்கா நிராகரிப்பு

(வாஷிங்டன்)

வளைகுடா பிரச்சினைக்கு தீர்வுகாண்பதில் சமாதான பேச்சுக்கான ஈராக்கின் அழைப்பை அமெரிக்கா மீண்டும் நிராகரித்துள்ளது.

இதேவேளை சவூதி அரேபியாவில் முப்பதாயிரம் அமெரிக்கப் படைகள் நிலைகொண்டுள்ளதுடன் மேலும் ஐம்பது யுத்தக் கப்பல்களில் முப்பத்தையாயிரம் படையினரை வளைகுடா நோக்கி அமெரிக்கா அனுப்பி வைத்துள்ளது.

இவைதவிர மேலும் நாற்பத்தையாயிரம் அமெரிக்க கடற்படையினர் வளைகுடா வந்து கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

வியட்னாம் யுத்தத்திற்குப் பிறகு அமெரிக்காவினால் (4ஆம் பக்கம் பார்க்க)

## இரு அணிகளும் வெளியேற்றம்

(சென்னை)

தமிழ்நாடு சட்டசபையில் நேற்று மீண்டும் அ.இ.தி.மு. கழக ஜெயலலிதா அணி உறுப்பினர்களும் திருநாவுக்கரசு அணி உறுப்பினர்களும் ஏற்படுத்திய குழப்பம் காரணமாக சட்டசபை நேரத்தை வீணடிப்பதாகக் காரணம் (4ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை விவகாரத்துக்கு புது இணைச் செயலாளர்

(டில்கி)

இந்தியாவின் வெளியுறவுச் செயலகத்தில் இலங்கை விவகாரங்களுக்கான இணைச் செயலாளராக அபயங்கர் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த ஆறு வருடங்களாக இலங்கைக்கான இணைச் செயலாளராகக் கடமையாற்றி வந்த அதிகாரி பாகிஸ்தானுக்கான இந்தியத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அபயங்கர் முன்னர் இலங்கைக்கான இந்தியத் துணைத் தூதுவராகக் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வவுனியா நகர கூட்டுறவுக் கிளைகள் இயங்க இராணுவம் தடை

(வவுனியா)

வவுனியா நகர எல்லைக்குள் அமைந்துள்ள கூட்டுறவுக் கிளைகள் பலவற்றை இயங்க வைப்பதற்கு இராணுவ அதிகாரிகளினால் தொடர்ந்து அனுமதி மறுக்கப்பட்டு வருகிறது. மேற்படி நகர எல்லைக்குள் அமைந்துள்ள கூட்டுறவுக் கிளைகளில் வீணாகத் தேங்கிக் கிடக்கும் பொருட்களை ஏற்றி வந்து கிராமங்களில் உள்ள கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் வைத்து விநியோகிப்பதற்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் 24 தமிழர்கள் சுட்டுப் பொசுக்கப்பட்டனர்

(திருக்கோணமலை)

திருமலையில் இருபத்தி நான்கு தமிழ்ப் பொதுமக்கள் சிங்கள இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டு, பின்னர் தீயிட்டு எரிக்கப்பட்டனர்.

திருமலை அலெஸ் தோட்ட இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் அப் பகுதியில் இருபத்தி நான்கு தமிழர்களைச் சுட்டுக் கொன்றனர். பின்னர் இறந்த இருபத்தி நான்கு பேரினது உடல்களையும் குவியல் குவியலாகப் போட்டுத் தீயிட்டு எரித்தனர். இச் சம்பவம் கடந்த 19 ஆம் திகதி அலெஸ் தோட்டப் பகுதியில் நடைபெற்றது. (ம)

## கிழக்கில் புலிகள் தொடர்ந்து தாக்குகிறார்கள்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தை இராணுவம் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாக அரசாங்கம் தெரிவித்து வரும் வேளையிலும் அங்கு விடுதலைப் புலிகள் இராணுவத்தை அடிக்கடி தாக்கி வருவதாகவும், இதனால் இராணுவத்திற்கு பெரும் உயிரிழப்புக்கள் ஏற்படுவதாகவும் பெயர் (4ஆம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

## முடிவல்ல ஆரம்பம்

1956 இன் பின் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட அவலங்களை சித்தரிக்கிறது ''சங்கரன்'' 20/-ரூபா. 1987 இல் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட துயரங்களைச் சித்தரிக்கிறது ''முடிவல்ல ஆரம்பம்'' 25/- ரூபா பூபாலசிங்கம், ஸ்ரீகாந் புத்தக சாலைகள் நல்லூர், யாழ்ப்பாணம். துர்க்கா ஸ்ரேசனேர்ஸ், சுன்னாகம்.

(R/592)


## போராளிகளுக்காக மகாயாகம்

(சாவகச்சேரி)

தமிழினத்தினது அமைதியையும், சுபீட்சத்தையும், சுதந்திரத்தையும், போராளிகளினது பூரண நலனையும் வேண்டி, சிவமகா யாகம் ஒன்று சாவகச்சேரி அருள்மிகுசந்திரசேகர,வாரிவனநாத சிவன்தேவஸ்தானத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி திவ்வியஜீவன சங்கம், வித்தகம், திருநீலகண்ட இளைஞர் சைவ அபிவிருத்திசபை ஆகியன இணைந்தே இந்த யாகம் ஆரம்பிக்கப்பட்டது. (35)

## சம்பள முற்பணம் வழங்கல்

உப்புக் கூட்டுத்தாபன வட பிராந்திய உப்பளங்களைச் சார்ந்த சகலருக்கும் கீழ்க் காணும் ஒழுங்கு முறையில் இடைக்கால சம்பள முற்பணம் வழங்க வட பிராந்திய முகாமையாளர் திரு. செ. வேலாயுதபிள்ளை நடவடிக்கை எடுத்துள்ளார்.

சகல தரத்தினருக்கும் காசோலை மூலம் ரூபா 750 இடைக்கால முற்பணம் வழங்கப்படும் எனவும் இடம் பெயர்ந்தோவசதிக்காகஇன்று 23. 8. 90 வியாழக்கிழமை காலை 9. 00 - 12. 00 மணி வரை மல்லாகம் மகா வித்தியாலயத்திலும் 27. 8. 90 திங்கட்கிழமை கொடிகாமம் திருநாவுக்கரசு தமிழ் கலவன் பாடசாலையிலும் (கச்சாய் றோட்) காசோலைகள் வழங்க பிராந்திய முகாமையாளர் ஏற்பாடுகள் செய்துள்ளார்.

## ஸ்கந்தபுரத்தில் அகதி முகாம்

(கிளிநொச்சி)

ஸ்கந்தபுரம் கரும்புத்தோட்டத்தில் புதிதாக அகதி முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் இந்த அகதி முகாமில் தஞ்சமடைந்துள்ளனர்.

வடகிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகம், அகதிகள் புனர்வாழ்வுக்கழகம், கிளிநொச்சி மாவட்ட அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் ஆகியன இணைந்து இம்முகாமை நடாத்திவருகின்றன. (49)

## வெற்றிவேண்டிப் பிரார்த்தனை

(கோப்பாய்)

தமிழீழ விடுதலைப்புலிகளினால் நடாத்தப்பட்டு வரும் போராட்டம் வெற்றிபெற வேண்டியும் தமிழீழ மக்களின் இன்னல்கள் நீங்கவும் வேண்டி ''வடகோவை வீரகத்தி வினாயகர்'' ஆலயத்தில் புதன்கிழமை ''மஹா கணபதி ஹோமம்'' நடைபெற்றது இன்றுவியாழக் கிழமைஅஷ்டோத்தர சங்காபிசேகமும்பஞ்சமுகஅர்ச்சனைகளும் நாளை வெள்ளிக் கிழமை ஆவணி சதுர்த்தி பூஜைகளும் பஞ்சமுக அர்ச்சனைகளும் நடைபெறவுள்ளன.

# அச்சுறுத்தலால் நசுக்கிவிட முடியாது

(கொழும்புத்துறை)

எமது சுயநிர்ணய உரிமையை பெற்றுக்கொள்வதற்கான இந்தப் போராட்டம், எந்தவித இராணுவ அச்சுறுத்தல்களாலோ அன்றி எந்த ஒரு பொருளாதார நெருக்கடியை உண்டுபண்ணுவதன் மூலமாகவோ நசுக்கிவிடமுடியாது என யாழ் மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பொறுப்பாளர் ஆஞ்சநேயர் தெரிவித்தார்.

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் நடந்த மேஜர் டயஸ் ஓராண்டு நினைவஞ்சலிக் கூட்டத்தில் அவர் உரையாற்றும்பொழுது மேலும் தெரிவித்ததாவது, எமது விடுதலைப் போராட்டத்தில் வெற்றி பெற்று தன்னிகரற்ற தமிழீழம் ஒன்றை ஸ்தாபிக்க வேண்டுமானால் போராட்ட காலத்துக்கு ஏற்ற வகையில் எமது சேவைகளை இந்த மண்ணுக்கு இரட்டிப்பு மடங்காக ஆக்கப்படவேண்டும். அதேவேளை எமது தேவைகளை நாம் இன்னும் சிக்கனப்படுத்திக்கொள்ள வேண்டும்,

இவ்வைபவத்தில் மேஜர் டயஸ் பற்றி அவர் கூறுகையில் இந்திய இராணுவம் தனது மனித நாகரிகத்துக்கு அப்பாற்பட்ட செயல்களை இருட்டடிப்புச் செய்த காலத்தில் ஓர் கிராமத்தில் என்ன நடக்கின்றது என்பதை அயல் கிராமத்துக்குக்கூட அறிய முடியாது இருந்த வேளையில் எமது போராட்டத்துக்கு வலுவூட்டி மக்களுடன் தொடர்பு கொண்டு தனது அரசியல் இராணுவ கடமையை செம்மையாகச் செய்த தியாகி யாழ். மாவட்ட அரசியல்

- ஆஞ்சநேயர்

பொறுப்பாளர் மேஜர் டயஸ் என்றும் குறிப்பிட்டார். மேலும் மகளிர் இராணுவ உறுபபினர்கள் உட்பட பலர் உரையாற்றினர். இக்கூட்டத்திற்கு மறைந்த மேஜர் டயஸ்ஸின் பாரியாரும், பல பெழுயார்களும் நூற்றுக்கணக்கான பொதுமக்களும் சமுகம் தந்திருந்தனர், (லோ)

## செட்டிகுளம்பகுதியிலிருந்து மக்கள் வெளியேற்றம்

(வவுனியா)

செட்டிகுளம் பிரதேசத்தில் வாழ்ந்து வந்த அத்தனை தமிழ்க் குடும்பங்களும் இடம் பெயர்ந்து சென்றுவிட்டன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேசத்தில் எந்தவொரு தமிழரையும் காணமுடியாது என்றும், சிங்களக் கிராமங்கள் சிலவற்றில் சில சிங்களக் குடும்பங்கள் மட்டுமே வாழ்ந்து வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சிங்களக்குடும்பங்கள் இராணுவம், மற்றும் ஊர்காவல் படையினரின் பாதுகாப்பில் வாழ்ந்து வருவதாகவும் அறியப்படுகிறது.

இதேசமயம், செட்டிகுளம் இராணுவமுகாமுக்கு அருகில் அமைந்துள்ள கடைகள், வீடுகள், கட்டிடங்கள் அனைத்தும் இராணுவத்தினரால் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன வென்றும் வைத்தியசாலையில் இருந்த மருந்துப் பொருட்கள் யாவும் இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டுள்ளன என்றும் இப்பகுதி உதவிஅரசாங்க அதிபர் பிரிவுக் காரியாலயம் உடைக்கப்பட்டும் ரயில்வே நிலையப் பகுதியில் அமைந்துள்ள பொதுநூல் நிலையம் எரிக்கப்பட்டும் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இப்பொழுது செட்டிகுளம் இராணுவமுகாம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. முகாமிலிருந்து துப்பாக்கிப்பிரயோகங்களும், ஷெல்பிரயோகங்களும் மேற்கொள்ளப்படுகின்றன இதன் காரணமாகவே ஆயிரக்கணக்கானதமிழ்க் குடும்பங்கள் இடம்பெயர்ந்துசென்றுள்ளன (தி)

## மாட்டிக்கொண்ட திருடர்களுக்கு மொட்டை

(கிளிநொச்சி)

போராட்டகாலத்தைப் பயன்படுத்தி பல திருட்டுக்களில் ஈடுபட்ட அதிகமான திருடர்களை கிளிநொச்சி மாவட்ட விடுதலைப்புலிகள் கைதுசெய்து விசாரணைக்குட்படுத்தி, திருட்டுப் பொருட்களை உரியவர்களிடம் சேர்த்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் ஆறு திருடர்கள் கனகபுரம் சேவியர்கடைச் சந்தியில் மக்கள் முன் பலமணி நேரம்நிறுத்தப்பட்டனர், திருடர்களில் இருவரின் தலை மொட்டை அடிக்கப்பட்டிருந்தது.

மொட்டையடிக்கப்பட்ட இருவரைத் தவிர ஏனைய நால்வரும் பின் அவ்விடத்தில் வைத்து விடுதலை செய்யப்பட்டனர். விடுதலை செய்யப்படாத இருவரும் அங்கிருந்து கிளிநொச்சி நகருக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கும் மக்கள் முன் பலமணி நேரம் நிறுத்தப்பட்டனர். பின் அவ்விடத்தில் வைத்து விடுதலை செய்யப்பட்டனர்.

ஆறு திருடர்களும் செய்த திருட்டுகள் பற்றி எழுதப்பட்ட சுவர் ஒட்டிகள் திருடர்களின் கழுத்தில் தொங்கவிடப்பட்டிருந்தன. (49)

### கிளிநொச்சியில் விவசாயிகள்

## பெரும்போக விளைச்சல் செய்யமுடியாத நிலைமை

(கிளிநொச்சி)

இம்முறை பெரும்போக நெற்செய்கையை மேற்கொள்ள விவசாயிகள் அஞ்சுகின்றனர்.

எரிபொருள் விலையேற்றம், கிருமிநாசினி, பசளை ஆகியவை இல்லாமை காரணமாகவே பெரும்போக வேளாண்மையைக் கைவிட விவசாயிகள்எண்ணியுள்ளனர்.

சிறுபோகத்தின்போது செய்கைபண்ணப்பட்ட நெற்பயிர்களுக்கு பாவிக்க போதியளவு பசளை கிடைக்காததாலும், நோய்வாய்ப்பட்ட பயிர்களுக்கு, நோயைக் கட்டுப்படுத்தப் பாவிக்கும் கிருமிநாசினிகள் கிடைக்காமல் போனதாலும் இம் முறை விவசாயிகள் எதிர்பார்த்த பலனைப் பெற முடியாது போய் விட்டது.

இது தவிர இராணுவத்தினரின் அடாவடித்தனத்தால் வயல்களுக்கு முறையாக நீர்பாய்ச்சவோ, புல்லுப் பிடுங்கவோ முடியாது போய் விட்டது. (49)

## வவுனியாவில் இராணுவம் பொருளாதாரத் தடை

(வவுனியா)

வவுனியாவில் பெருந்தொகையான உணவுப் பொருட்கள் வாங்கச் செல்வதற்கு இராணுவத்தினரால் தடை செய்யப்பட்டுள்ளதுடன் பொதுச்சந்தையில் அத்தியாவசியமான பொருட்கள் விற்பனை செய்வது கூட தடைசெய்யப்பட்டுள்ளது.

நகரப்பகுதி காவல்அரணில் நிற்கும் இராணுவத்தினரால் குறிப்பிட்ட அளவு உணவுப் பொருட்களே மக்கள் வாங்கிச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்தசில நாட்களாக நீடித்துவரும் இந்தத்தடையினால் வவுனியா தமிழ்க்கிராமங்களில் உள்ள கடைகளில் அத்தியாவசியப்பொருட்களுக்கு பெருந் தட்டுப்பாடு நிலவுகிறது. (தி)

## நினைத்தபடி கட்டணம் அதிகரிப்பு

(வேலணை)

அராலித் துறைமுகத்தால் தீவுப்பகுதிக்குச் செல்லும் பிரயாணிகளிடம் படகோட்டிகள் தாங்கள் தாங்கள் நினைத்த மாதிரி பிரயாணக்கட்டணங்களை அறவிட்டுவருகின்றனர்.

பிரயாணிகளுடன் சைக்கிள் வண்டிகளையும் அளவுக்கு அதிகமாக ஏற்றி நடுக்கடலில் படகுடன் பிரயாணிகளையும் சைக்கிள் வண்டிகளையும் மூழ்கடித்து வருவதும் தினமும் நடக்கும் சம்பவமாய் இருக்கிறது. (14)

ங்கப்பட்டுள்ளது.

## பயிற்சி பூர்த்தி

(சாவகச்சேரி)

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினர் சோமாஸ்கந்த சனசமூக நிலையத்தில் நடத்தி வந்த முதலுதவிப் பயிற்சிக்கான பரீட்சை பூர்த்தியானது. இந்த முதலுதவிப் பயிற்சிக்கான செய்முறைப் பயிற்சியும், எழுத்துமுறைப் பயிற்சியும் சோமாஸ்கந்த சனசமூக நிலைய மண்டபத்தில் வைத்து நடாத்தப்பட்டது. (35)

## முதலுதவிச் சிகிச்சை

(சாவகச்சேரி)

கல்வயலில் முதலுதவி சிகிச்சை நிலையம் ஒன்றை தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவினர் ஆரம்பித்துள்ளனர். இந்த முதலுதவி சிகிச்சை நிலையம் தினமும் இரவு பகல் இயங்கி வருகிறது.

பயிற்சி பெற்ற பெண் முதலுதவியாளர்கள் இந்த முதலுதவி சிகிச்சை நிலையத்தில் கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (35)

## கொழும்பு சென்ற அதிகாரிகள் திரும்பவில்லை

(கிளிநொச்சி)

கொழும்பு சென்ற கிளிநொச்சி கச்சேரி உதவி அரசாங்க அதிபரும், கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்க செயலாளரும் இதுவரை திரும்பி வரவில்லை.

கச்சேரி உதவி அரசாங்க அதிபர் கே. துரைராசா, செஞ்சிலுவை சங்க செயலாளர் எஸ். சிவராஜலிங்கம் ஆகியோர் பட்டினிச் சாவை எதிர் நோக்கிக் கொண்டிருக்கும் கிளிநொச்சி மக்களுக்கு உணவுப் பொருட்களை கொழும்பிலுள்ள அரசஉணவுக்களஞ்சியத்திலிருந்துபெற்றுக் கொண்டு வருவதற்காக இம்மாத முற்பகுதியில் கொழும்புக்குச் சென்றனர்.

அவர்கள் இருவரும் உணவுப் பொருட்கள் நிரப்பப்பட்ட 24 லொறிகளுடன் கிளிநொச்சிக்குத் திரும்பிக் கொண்டிருப்பதாக கடந்த ஒருவாரத்திற்கு முன் செய்தி ஒன்று கிடைத்தது.

அச் செய்தி கிடைத்து ஒரு வாரத்திற்கு மேலாகியும் இதுவரை அவர்கள் இருவரும் திரும்பவில்லை. (49)


## ஓராண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 19 - 03 - 1970



இறைவன் அடியில் 25 - 08 - 1989

கணபதி கோமதாஸ்
(இந்திரன்)

அன்பின் செல்வமே இந்திரா! எம் இனத்தைக் காட்டிக் கொடுக்கும் துரோகிகளால், நீ அழிக்கப்பட்டு ஓராண்டு சென்றாலும், எம் இதயங்களில் எந்நாளும் வாழ்ந்து கொண்டேயிருக்கிறாய்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சர்வோதயா வீதி,
ஆவரங்கால்.

பெற்றோர், சகோதரர்,
உறவினர், நண்பர்கள்
(R-593)

சிந்தனைக்கு

தளர்ந்தவனை தூக்கி நிறுத்தல் போதாது,
பின்னர், தாங்கித் துணை நிற்கவேண்டும்.

- வில்லியம் ஷேக்ஸ்பியர்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 23-08-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

# ஒழுங்குபடுத்துங்கள்

சிறிலங்கா அரசாங்கம் தமிழ் மக்களுக்கெதிராக போரை ஆரம்பித்து ஏறத்தாள இரண்டரை மாதங்கள் ஆகிவிட்டன. அரச களஞ்சியத்திலும் தனியார் வர்த்தகர் களிடமும்இருந்த உணவுப்பொருட்களினதுகையிருப்புக்கள் முற்றாகத் தீர்ந்துவிட்டது என்றே கூறலாம்.

யாழ். மாவட்டத்திற்கு வழமையாக வரும் உணவுப் பொருட்களில் 65 சதவீதமானவை தனியார் லொறிகள் மூலமே வருபவையாகும், அந்த லொறிச் சேவைகள் இரண்டரை மாதங்களாக முற்றாக ஸ்தம்பித்து விட்டன. அரசாங்கம் கப்பலில் அனுப்பி வைக்கும் உணவுப் பொருட்களோ ''யானைப் பசிக்கு சோளம் பொரி'' போன்றதாகும்.

அதேவேளை யாழ் மாவட்டத்தில் உள்ள சனத் தொகையோடு மேலும் மூன்றிலொரு பங்கு எண்ணிக்கையான மக்கள் அகதிகளாகக் குடாநாட்டிற்குள் வந்துள்ளார்கள்.

தற்போது யாழ். மாவட்டத்திற்கு உடனடியாக ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி, நாலாயிரம் மெற்றிக் தொன் மா, இரண்டாயிரம் மெற்றிக் தொன் சீனி, ஐம்பது மெற்றிக் தொன் பால் மா, ஆயிரம் மெற்றிக் தொன் பருப்பு என்பன தேவைப்படுகின்றது.

இந்நிலையில் சில வாரங்களுக்கு ஒரு தடவை அரசாங்கம் கப்பலில் அனுப்பி வைக்கும் உணவு சரியான முறையில் பங்கீடு செய்யப்பட்டால் ஒழிய தற்போது உள்ள சூழலில் ஏழை மக்களை பட்டினிச் சாவில் இருந்து காப்பாற்றுவது கஷ்டமான காரியமாகப் போய்விடும்.

அத்தியாவசியப் பொருட்கள் அன்றாட தேவையினை விடக் குறைவாகக் கிடைக்கின்ற வேளையில் பங்கீட்டு அடிப்படையிலான விநியோகம் சகல தரப்பிலுமுள்ள மக்களுக்கு குறிப்பாக ஏழைகளுக்கு நியாயமான விலையில் பொருட்கள் கிடைக்கச் செய்வதற்கு சிறந்த வழிமுறையாகும்.

இன்று யாழ். மாவட்டத்திற்கு கொழும்பில் இருந்து கப்பல் மூலம் வரும் உணவுப் பொருட்கள் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக பங்கீட்டு முறையில் விநியோகிக்கப்பட்டு வருவது சரியானதொரு வழிமுறையாகும்.

ஆனால் நடைமுறையில் கூட்டுறவுச் சங்கங்களுக் கிடையிலும் ஒவ்வொரு கூட்டுறவுச் சங்க கிளைகளுக்கு இடையிலேயும் சீரான ஒரு முறை பின்பற்றப்படுவதில்லை என்பதனை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

எடுத்துக்காட்டாக சில சங்கங்களில் ஒருமுறை மட்டுமே விநியோகிக்கப்பட்டிருக்க, சில சங்கங்களில் ஒன்றிற்கு மேற் பட்ட தடவை விநியோகிக்கப்பட்டுள்ளமையும், சங்கங்களுக்கு இடையில் விநியோகிக்கப்படும் பொருட்களில் வேறுபாடு இருப்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் சங்கக்கிளைகளில் மோசடி நிகழ்வதும் தெரியவந்துள்ளது.

அத்தோடு வழமையான காலத்தில் உள்ள குறைபாடுகள் போன்றே உரிய நேரத்திற்கு சங்கக் கிளைகள் திறவாமையும், பொருட்கள் விநியோகத்தில் ஒழுங்குமுறை பின்பற்றப்படாமையும் இன்னும் தொடரும் குறைபாடாகவும் உள்ளன.

இவை தவிர வறியவர்களுக்கு வழங்கப்படும் கூப்பன்கள், ஜனசவிய போன்ற மானியங்களுக்கு வறிய மக்களின் தேவையுடன் சம்பந்தப்படாத பொருட்களை (எடுத்துக்காட்டாக வாசனைச் சோப்புகள், பவுடர்) வழங்குவதும், பெரும்குறைபாடாகும். இவ்வாறான நடவடிக்கை கூட்டுறவுச் சங்கங்கள் தமது நட்டத்தை வறிய மக்களின் தலையில் கட்டும் நடவடிக்கையாகும்.

எனவே இன்றைய நெருக்கடியான சூழ்நிலையில் கூட்டுறவுச் சங்கங்கள் மிகவும் சிறப்பான முறையில் சேவை மனப்பான்மை கொண்டு செயற்படவேண்டும்.

அரசாங்க செயலகமும், பங்கீட்டுப் பொருட்களை விநியோகிக்கும்போது என்ன அடிப்படையில் பங்கீட்டினை மேற்கொள்ள வேண்டும் என்ற வரன்முறைகளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டுமல்லாமல் பொது மக்களுக்கும் தெரியப்படுத்துவதோடு விநியோகிக்கப்படும் காலம், தடவைகள் என்பனவற்றையும் வெளிப்படுத்த வேண்டும்.

இதனால் பொதுமக்களுக்கும் கூட்டுறவுச்சங்க ஊழியர்களுக்கும் இடையில் ஏற்படும் வீண் மனஸ்தாபங் களைத் தவிர்த்துக் கொள்ள முடிவதோடு தவறுவிடும் சங்கங்கள், ஊழியர்கள் பற்றியும் இனங்காண்பது சுலபமாக இருக்கும்.

# அமெரிக்கா தாக்குதல் நடத்துமாயின் உலக அழிவு தான் ஏற்படும்

## - சதாம் ஹுசைன் எச்சரிக்கை

(பாக்தாத்)

''அமெரிக்கா ஈராக் மீது தாக்குதலை மேற்கொள்ளு மாயின் அது உலக அழிவுக்கு வழி வகுக்கும்'' என்று ஈராக் அமெரிக்காவை எச்சரிக்கை செய்துள்ளது. மேலும் வளை குடாவில் அமைதியை ஏற் படுத்த அமெரிக்காவுடன் பேச்சுக்கள் நடத்த தயார் நிலையில் உள்ளதாகவும் தெரி வித்துள்ளது.

நேற்று முன்தினம் இந்த எச்சரிக்கையை விடுத்த ஈராக் வெளியுறவு அமைச்சர் தாரிக் அஸிஸ் அமெரிக்கா சமாதான பேச்சுக்களைத் தொடரும் வரை ஈராக்கிலுள்ள மேலை நாட்டவர்கள் விருந்தாளி களாக தங்கி நிற்பார்கள் என் றும் தெரிவித்துள்ளார்.

வளைகுடா பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் அமெரிக்கா எவ்வித ஆக்க பூர்வமான முடிவையும் மேற்கொள்ள வில்லை என்று ஈராக் தெரி வித்துள்ள அதேவேளை ஈராக் கில் தடுத்து வைக்கப்பட் டுள்ள மேலை நாட்டவர்களை விடுவிக்கும் வரை சமாதான பேச்சுக்குத் தயாரில்லை என்று பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தட்சர் அறிவித்துள்ள தாகக் கூறப்பட்டது.

## மாடி இடிந்து 5 பேர் பலி

(ராஜஸ்தான்)

ராஜஸ்தான் மாநிலத்தில் சனநெருக்கடிமிக்க நகரொன் றில் இரண்டுமாடிக் சட்டடம் இடிந்து விழுந்தமையினால் ஐந்து பேர் கொல்லப்பட்ட துடன்; பலர் காயமடைந் தனர்.

## லப்தீப்பும் கண்டனம்

(சென்னை)

இலங்கையில் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்ட சம் பவம் குறித்து இந்திய முஸ் லிம் யூனியன் லப்தீப் பிரிவு கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்தக் கொலைக்கு காரண மானவர்கள் குறித்து மத்திய மாநில அரசுகள் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும்

இலங்கைச் சம்பவங்களை உள் நாட்டுப்பிரச்சினைஎன்று கருத முடியாது. ஏராளமான இந்தியர்கள் அங்கே தொல் லைப்படுகின்றனர்.

இந்தியர்களைப் பாதுகாக்க வேண்டிய கடமை இந்திய அரசுக்கு உண்டு. இவ்வாறு அப்பிரிவு தெரிவித்துள்ளது.

## படகு கவிழ்ந்து 25 பேர் பலி

(பீகார்)

பீகார் மாநிலத்திற் பத்தி யார்பூர் கிராமத்துக்கருகே கங்கையாற்றில் பயணிகள் படகு ஒன்று கவிழ்ந்ததில் இருபத்தைந்து பேர் இறந்தனர். பத்தொன் பது பேரைக் காணவில்லை. பதினைந்து பேர் நீந்திக் கரையை அடைந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டது.

## மண் சரிவுக்கு 9 சிறுவர் பலி

(குஜராத்)

குஜராத் மாநிலத்தில் யூனானெக் என்னுமிடத்தில் ஏற்பட்ட மண் சரிவினால் ஒன்பது சிறுவர்கள் பலி யானார்கள்.

குளிப்பதற்காக இச்சிறுவர் கள் சென்றபொழுது மழை யின் நிமித்தம் ஒதுங்கி நின்ற பொழுதே இச்சிறுவர்கள் விபத்துக்குப் பலியானமை குறிப்பிடத்தக்கது.

## எட்டுப் பேர் எதிர்ப்பு

(சென்னை)

இலங்கையில் அகதி முகாம் கள் அமைக்க இந்தியா ஆத ரவு வழங்கக்கூடாது என்று கூறும் மகஜர் ஒன்றை இலங் கைத் தமிழ் பிரமுகர்கள் எட் டுப்பேர் முதலமைச்சர் மு. கருணாநிதி மூலம் பிரதமர் வி. பி. சிங்கிற்கு அனுப்பி வைத்துள்ளனர்.

முன்னாள் எம். பி. தங்கத் துரை, ஓய்வுபெற்ற நீதிபதி சிவானந்தன் திருக்கேதீஸ்வர ஆலய பரிபாலன சபை நிர் வாகி நமசிவாயம், பத்திரிகை யாளர்கள் சிவநாயகம், ஈழ வேந்தன் உட்பட எட்டுப் பேர் இதனை அனுப்பியுள்ள னர்.

இலங்கையில் தமிழ்ப்பகுதி களில் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நிறுத்த இந் திய அரசு தனது செல்வாக் கைப் பாவித்துத் தடுத்து நிறுத்த வேண்டும் எனவும் இவர்கள் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்

# இந்தியா மீது தாக்கினால் கடும் எதிர்விளைவு நேரும்

## - வி. பி. சிங்

(டில்லி)

பாகிஸ்தான் இந்தியாமீது தாக்குதலை தொடுக்குமாகில் அது கடுமையான எதிர்விளை வுகளைச் சந்திக்க நேரிடும் என்று இந்தியா எச்சரிக்கை செய்துள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் பாகிஸ்தானுக்கு இந்த எச்சரிக்கையை விடுத்த இந்தியப் பிரதமர் திரு.வி.பி சிங் பாகிஸ்தானின் நடவ டிக்கைகள் குறித்து கலவரம் அடையக்கூடாது என்றுகூறிய துடன்; இந்தியாவுக்கு எதி ரான எந்த தாக்குதலையும் முறியடிக்க தமது படை முழுத் தயாரிப்புடன் இருப் பதாகவும் தெரிவித்தார்.

பாகிஸ்தானுடனான பிரச் சினைகளை பேச்சுக்கள் மூலமே தீர்த்துக்கொள்ள இந்தியா உள்ளதென்றும், அது சாத்தியப்படாவிட்டால் வேறு எந்த நடவடிக்கையை யும் மேற்கொள்ள உறுதி பூண்டுள்ளதாகவும் கூறினார்.

இந்தியாவுக்கும், பாகிஸ் தானுக்குமிடையில் மோத லொன்று உருவாவதை அமெ ரிக்கா, சோவியத்யூனியன் ஆகிய உலக நாடுகள் விரும்ப வில்லை என்றும் அங்கு கூறி னார்.

# தூதரக மாற்றத்துக்கு பங்களாதேஷ் மறுப்பு

(டாக்கா)

குவைத்திலுள்ள தமது தூத ரகத்தை பாக்தாத்துக்கு மாற் றும் ஈராக்கின் யோசனையை பங்களாதேஷ் நிராகரித்துள் ளது.

இதேவேளை பங்களாதேஷ் பாராளுமன்றத்தின் அவசரக் கூட்டமொன்று அடுத்த சனிக் கிழமை கூடப்படவுள்ளது.

இக் கூட்டத்தில் வளை குடா சம்பந்தப்பட்ட பிரச் சினை விவாதத்துக்கு எடுத் துக் கொள்ளப்பட உள்ள துடன் சவூதி அரேபியாவில் தங்கியுள்ள பன்னாட்டு துருப் புக்களுக்கு பங்களாதேஷின் படையை அனுப்புவது குறித் தும் அங்கீகாரம் பெறப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

## இராணுவ பதக்கம் பறிக்கப்பட்டது

(வார்ஸா)

சோவியத்தின் முன்னாள் தலைவர் லியனோச் பிரஸ் நேவுக்கு போலந்து அரசி னால் முன்பு வழங்கப்பட்ட உயர் இராணுவ பதக்கம் பறிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனியிலிருந்து போலந்து விடுதலை பெறுவதற்கு காலஞ் சென்ற பிரஸ்நேவ் செய்த உதவிக்காக போலந்து அரசி னால் 1974 ஆம் ஆண்டு இந்த இராணுவ உயர் பதக்கம் வழங்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

## நீதி மன்றத்துக்கு விஷேடஅதிகாரம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ வுக்கும் அவருடன் இணைந்த வர்களுக்கும் எதிரான ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்க வென புதிய இடைக்கால அர சாங்கத்தால் நியமிக்கப்பட் டுள்ள சிறப்பு நீதிமன்றத்திற்கு ஏராளமான விஷேட அதிகா ரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பூட்டோவுக்கு எதிரான வழக்குகளை ஒத்திப்போடாது நடத்துமாறும், நீதியின் நல னைத்தவிர்ந்த ஏனைய எதற் கும் நீதிமன்றத்தை ஒத்திப் போடக்கூடாது என்றும் இடைக்கால அரசால் உத்தர விடப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்பட்டது.

## வளைகுடாவுக்கு பிரஞ்சுப் படை

(பாரிஸ்)

வளைகுடா பகுதிக்கு பிரான் சும்தனது படைகளை அனுப்பி வைத்துள்ளது.

கடற்படை, வேவு விமா னங்கள் என்பனவே இவ்வாறு அனுப்பிவைக்கப்பட்டுள் ளவைகளாகும்.

## கருப்பட்டி விற்பனை

(தீவுப்பகுதி)

வேலணை தெங்குபனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட கருப் பட்டி விற்பனவு வைபவம் மேற்படி சங்க அலுவலகத்தில் நடைபெற்றது.

முதலாவது விற்பனையை இச்சங்கத்தின் தலைவர் திரு. நா. குணசிங்கம் சம்பிரதாய பூர்வமாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தீவக அரசியல் பொறுப்பாளர் திரு. நரேஸி டம் கையளித்து ஆரம்பித்து வைத்தார். (15)

## படை சுட்டு ஒருவர் பலி

(வவுனியா)

வவுனியா காட்டுமாங்குளம் என்னுமிடத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பொதுமக்க ளில் ஒருவரை சுட்டுக் கொன் றுள்ளனர்.

கொண்டைகட்டி நடராசா என்பவரே இவ்வாறு கொல் லப்பட்டவராவார். இச்சம்ப வம் கடந்த 18 ஆம் திகதி நடைபெற்றுள்ளது. (ம)

# திருமலையில் சிங்கள முஸ்லிம் அகதிகள் திரும்பி விட்டனராம்;

## தமிழ் அகதிகளை முகாமில் வைக்க ஏற்பாடு என்கிறார் ரஞ்சன்

(கொழும்பு)

கடந்த நான்கு ஐந்து ஆண்டுகளாக இருந்த சிங்களவர்களும் முஸ்லிம்களும் திருக்கோணமலையில் தங்கள் சொந்த இடங்களுக்கு இப்போது திரும்பியுள்ளதாகவும் இவர்களின் வீடுகளும் சொத்துக்களும் இந்திய அமைதிப் படையினால் அல்லது ஈ. பி. ஆர். எல். எவ்வினால் அழிக்கப்பட்டுள்ளதாகவும் சிறிலங்கா பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா நேற்றுக்காலை தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள வெளிநாட்டு ராஜதந்திரிகளை அழைத்து இலங்கையின் ''உண்மைநிலை'' பற்றி விளக்கிக்கூறிய ரஞ்சன் விஜேரத்தினா அகதிகள்பற்றி ராஜதந்திரிஒருவர் கேட்டகேள்விக்குப் பதிலளிக்கையில் மேலும் கூறியதாவது;

வடக்குக்கிழக்கில் நிலைமை முற்றாகச் சீரான பின்னரே தமிழ் அகதிகள் அங்கு மீளக் குடியமர்த்தப்படுவார்கள். மன்னார்த்தீவில் தமிழ் அகதிகளை வைத்துப் பராமரிப்பதற்கு சர்வதேச செஞ்சிலுவைச்சங்கமும் ஐ. நா. ஸ்தாபனமும் தயாராக இருந்தபோதிலும் தமிழீழவிடுதலைப் புலிகள் எதிர்ப்பதால் அதைச் செயற்படுத்த முடியாமலுள்ளது. விரைவில் மன்னார்ப் பகுதியிலிருந்து புலிகளை விரட்டிவிடுவோம். இதன் பின் தமிழ் அகதிகள் முகாம் நிர்வாகப்பொறுப்பு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இம்மாநாட்டில் கலந்து கொண்ட சிறிலங்கா வெளியுறவு அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் வெளிநாடுகள் அளிக்கும் உதவிக்கு ராஜதந்திரிகளுக்கு நன்றி தெரிவித்தார் பாதுகாப்பு செயலர் சிறில் ரணத்துங்க. ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் பிராட்மன் வீரக்கோன்' வெளியுறவுச் செயலர் பெர்னாட் திலகரத்தினா ஆகியோரும் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

## கிளிநொச்சி மக்கள் பட்டினிச் சாவில்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பகுதியில் வசிக்கும் பெரும்பாலான மக்கள் நாளாந்தம் பட்டினிச்சாவை எதிர் நோக்கி வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மைக்காலங்களில் இப்பகுதியில் பரவலாக குடியேறியுள்ள மலையகத் தமிழ் மக்களே இவ்வாறு பட்டினிச் சாவை எதிர் நோக்கியுள்ளார்கள்.

கடந்தகால வன்செயல்களின் நிமித்தம் இடம் பெயர்ந்து இப் பகுதியில் குடியேறிய இம்மக்கள் நாளாந்தம் கூலித் தொழிலே செய்து வருபவர்களாவர். தற்பொழுது நாட்டு நிலைமைகளின் நிமித்தம் இவர்களுக்கு அவ்வித கூலித் தொழிலும் இல்லாமல் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

### இரு அணிகளும்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காட்டி சபாநாயகர் தமிழ்க் குடிமகன் இரு தரப்பு உறுப்பினர்களையும் சபையிலிருந்து வெளியேற்றி சபையின் இக் கூட்டத் தொடர் முடியும் வரை அவர்கள் சபை நடவடிக்கைகளில் பங்குபற்ற முடியாதென்றும் கட்டளை பிறப்பித்தார்.

### கூட்டுறவு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூமாங்குளம், வேப்பங் குளம், தாண்டிக்குளம் ஆகிய பகுதிகளில் இராணுவத்தினரின் நடமாட்டம் இல்லாத போதிலும், இப் பகுதிக் கூட்டுறவுக் கிளைகளில் பணிபுரிய ஊழியர்கள் மறுத்துள்ளனர்.

இராணுவத்தினரின் நடமாட்டம் உள்ள பகுதிகளான வவுனியா மத்தி, குடியிருப்பு, வவுனியா நகரம் ஆகிய கூட்டுறவுக் கிளைகளில் மீண்டும் சேவையை ஆரம்பிப்பதற்கு இராணுவ அதிகாரிகள் அனுமதி மறுத்துள்ளனர்.

வவுனியா நகர எல்லைப் பகுதியில் பூந்தோட்டம், கோவில்குளம் ஆகிய இரு கிளைகளுமே இயங்கி வருகின்றன. (தி)

## கண்டனக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் ஒன்பது மணிக்கு சிறிலங்கா அரசாங்கத்தின் விமானத் தாக்குதலைக் கண்டித்து கத்தோலிக்க வெகுஜன ஒன்றியம் கண்டனக் கூட்டம் ஒன்றை நடத்தவுள்ளது.

இக்கண்டனக் கூட்டம் கொழும்புத்துறை சென். யோசப் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

### கிழக்கில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட விரும்பாத அரச அதிகாரி தெரிவித்ததாக வெரித்தாஸ் வானொலி நேற்றிரவு அறிவித்தது.

மேலும் பலியாகும் இராணுவத்திடம் இருந்து விடுதலைப் புலிகள் பெருமளவு ஆயுதங்களை எடுத்துச் சென்றுள்ளதாகவும் அவ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

### 'கரடி' விற்கு ம

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவரால் தேசியக்கொடி விற்பனை செய்யப்பட்டுவருகிறது

தேசியக்கொடியைக் கட்டாயம்பெற்றேகாவல் அரணைத் தாண்டி உள்ளேயும், வெளியேயும் செல்லவேண்டும் என்றும் சைக்கிள் கொண்டு செல்பவர்கள் கொடியை சைக்கிளில் பறக்கவிட்டுச் செல்ல வேண்டும் என்றும் இராணுவத்தினரால் மிரட்டப்படுகின்றனர்.

'கரடி' என்று அழைக்கப்படும் சிங்களவர் தேசியக் கொடியை பத்து ரூபாவிற்கு விற்பனை செய்கிறார்.

பாதுகாப்பு நிதிக்கு பணம் சேர்க்கும் முகமாகவே இராணுவம் இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளது என்று தெரிவிக்கப் படுகின்றது. (தி)

### புலிகள்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று சிங்களவர்களில் ஒருவர் எஸ். வீ. ஆர் என்ற அரிசி ஆலையின் பின்புறம் உள்ள மின்கம்பத்தில் ஏறி மின்குமிழை கழற்ற எத்தனித்தபோது காவல் அரணில் நின்ற இராணுவத்தினர் அவரை நோக்கிச் சுட்டனர் மின்குமுழை கழற்றி அப்பகுதியை இருளாக்கி திருட்டு வேலையில் ஈடுபடமுயன்றவர் ஸ்தலத்திலேயே துடிதுடித்து இறந்தார்.

மடுக்கந்த பகுதியைச் சேர்ந்த சுதுமல்லி என்பவரே இறந்தவராவார். அதே பகுதியைச்சேர்ந்த குடாபண்டா, ரஞ்சித் என்பவர்களே கைதானவர்கள் என்று தெரிவிக்கப் பட்டது.

விடுதலைப்புலிகள் தம்மைத் தாக்க வந்துவிட்டனர் என்ற எண்ணத்திலேயே தாம் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டதாக ராணுவதரப்பில் கூறப்பட்டதாம். (தி)

### ஈராக்கின்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பி வைக்கப்பட்டுள்ள மிகப்பெரிய படைப்பிரிவு இது என்று அரசியல் வட்டாரங்கள் கருத்து தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சி அகதிகளுக்கு செஞ்சிலுவைச் சங்கம் உதவி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்கம் கிளிநொச்சியில் பட்டினிச் சாவை எதிர் நோக்கிக் கொண்டிருக்கும் பதினைந்து கிராமங்களைத் தெரிவுசெய்து அக்கிராம மக்களுக்கு தலா 300 ரூபா பெறுமதி வாய்ந்த உணவுப் பொருட்கள், சவர்க்காரம், மெழுகுதிரி மற்றும் பொருட்களையும் வழங்கி வருகிறது.

கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் வண. பிதா எஸ். ஜெயநேசன் அடிகளாரின் முயற்சியால் ஐந்து லொறிகளில் கொழும்பிலிருந்து மேற்படி உணவுப் பொருட்கள் மருந்து வகைகள் கொண்டு வரப்பட்டு முறிப்பு தென் இந்திய திருச்சபையில் வைத்து வழங்கப் பட்டு வருகின்றன.

பொனநகர், முறிகண்டி செல்வபுரம், பாரதிபுரம் கிழக்கு, மேற்கு, உதயநகர், விவேகாநந்த நகர், செல்வா நகர், முறிப்பு, கோணாவில் ஊற்றுப்புலம் உட்பட பல கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கே இவை வழங்கப் பட்டன. (49)

## விஜயதுங்கா ஜா சந்திப்பு

(கொழும்பு)

புதிதாக நியமனம் பெற்ற இந்தியத் தூதுவர் நாகேந்திர நாத் ஜா நேற்று சிறிலங்கா பிரதமமந்திரி டீ. பி. விஜயதுங்காவைச் சந்தித்துப் பேசினார். இப்பேச்சுவார்த்தையில் இருதரப்பு விடயங்கள், பொது விவகாரங்கள் சம்பந்தமாக பேசப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### திருமலையில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பலகாமம், சபாரத்தினம் குட்டி கொலனிமேற்கு ஆகிய மூவரைக் கைதுசெய்த ராணுவத்தினர் இவர்களை ராணுவ முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

மேலும் வயலுக்குச் சென்ற கிருஷ்ணபிள்ளை, கந்தசாமி என்ற இரண்டு விவசாயிகளையும் கைது செய்துள்ளனர்.

தம்பலகாமத்தில் அகதி முகாமுக்கு சாமான் வாங்குவதற்கென சென்ற மூன்று தமிழர்களை இராணுவத்தினர் தமது வாகனங்களில் ஏற்றிச் சென்றனர்.

கடந்த 19ஆம் திகதி நிலாவெளி அகதி முகாமில் இருந்து தமது வீடுகளைப் பார்வையிடச் சாம்பல்தீவுக்குச் சென்ற இருபது தமிழர்களை இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.

கடந்த 20ஆம் திகதி தம்பலகாமம் நாவல்சேனை என்னும் இடத்துக்கு பொருள்கள் வாங்கச்சென்ற நான்கு பொதுமக்களை இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.

### ஊர்காவற்றுறையில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லும் சிறிலங்கா விமானப் படை போர் விமானங்கள் குண்டுவீசியும் ஹெலிக்கொப்ரர்கள் துப்பாக்கிப்பிரயோகம் செய்தும் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தன.

குண்டுவீச்சு விமானங்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதும் ஹெலிக்கொப்ரர்கள் குண்டுவீசுவதும் கூட இப்பொழுது யாழ். குடாநாட்டில் சாதாரண நடவடிக்கைகளாகிவிட்டன. நேற்று அதிகாலை காரைநகர் கடற்படையின் கப்பல்களும் சரமாரியாகப் பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டன. ஊர்காவற்றுறை, கரைநகர்ப் பகுதிகளில் இருந்து மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குக் குடிபெயரத்தொடங்கியுள்ளனர்.

## கேரதீவு சங்குப்பிட்டி துறையில் ஹெலிசூடு

(ஈச்சமோட்டை)

கேரதீவுசங்குப்பிட்டிஇறங்கு துறையில் இரு பகுதியிலும் நின்று கொண்டிருந்த பயணிகள் மீது நேற்று முன்தினம் ஹெலியிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப் பட்டது.

இரண்டு ஹெலிகள் வானில் வட்டமிட்டு நோட்டமிட நடத்தப்பட்ட இந்த ஹெலித் தாக்குதலின் போது அங்கிருந்த பயணிகள் நீருக்குள் குதித்துவிட்டமையால் உயிர்ப் பலி எதுவும் ஏற்படவில்லை.

## அரசு மீது சிறிமா குற்றச்சாட்டு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணத்தில் இன்று ஏற்பட்டுள்ளபிரச்சினைகளுக்கு பிரேமதாசா அரசாங்கத்தின் நடவடிக்கைகளே காரணம் என்று சிறிலங்காவின் முன்னாள் பிரதரும் இன்றைய எதிர்க்கட்சித் தலைவருமான திருமதிசிறிமா பண்டாரநாயகா குற்றம் சாட்டினார்.

இலங்கையின் இனப்பிரச்சனைக்கு சுமுகமான தீர்வு காண்பதற்கு விடுதலைப் புலிகள் தவிர்ந்த மற்றைய தமிழ்க் குழுக்களுடனும் அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாகவும் திருமதி சிறிமா கூறினார்.

## ''அந்தமானைக்'' காணவில்லை

(புதுடில்லி)

கடல் கொந்தளிப்பினால் இந்தியக் கடற்படையைச் சேர்ந்த ''அந்தமான்'' என்ற கப்பல் நேற்றுக்காணாமல் போய்விட்டது. இத்தகவலை இந்திய வானொலி நேற்று அறிவித்தது. இந்தக் கப்பலை தேடுவதில் இந்திய விமானப் படை ஹெலிகொப்டர்களும் விமானங்களும் ஈடுபட்டுள்ளன

### விமானத்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மணியந்தோட்டத்தில்விமானத்திலிருந்து மேற்கொள்ளப் பட்ட தாக்குதலில் இருவர் மரணமடைந்தனர். எட்டிற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

காரைநகரில் கடற்படை முகாமில் இருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் பிரயோகத்தால் ஒருவர் பலியானார்.

மேலும் அராலித்துறை, திருநெல்வேலி, மானிப்பாய், தாவடி ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் பலர் காயமடைந்தனர்.

நேற்று குடாநாடு முழுவதும் விமானங்கள் தாக்கியதாலும் போக்குவரத்து முற்றாக நடைபெறாமையினாலும் மேலும் பலர் இறந்திருக்கலாம், காயமடைந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இன்றைய தாக்குதலில் இறந்தவர்களின் காயமடைந்தவர்களின் பெயர் விபரங்கள் நாளை வெளிவரும்.

---

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நடாத்தும்

## மாவீரர் தின கலை கலாசாரப் போட்டிகள்

தமிழீழ மக்களே!

★ இவ்வாண்டு மாவீரர் தினத்தையொட்டிவிடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் எழுத்தாளர், கலைஞர்கள், மற்றும் இத்துறையில் ஆர்வமிக்கோர், மாணவர்கள் அனைவரையும் ஊக்குவிப்பதற்காகவும், அவர்களின் ஆற்றல்களை வெளிக்கொணர்வதற்காகவும் கலை கலாசாரப் போட்டிகளை நடாத்தவுள்ளது.

★ இப்போட்டிகள் கீழ்க்காணும் விடயங்களில் நடைபெறவுள்ளன.

★ நாவல் ★ சிறுகதை ★ கவிதை
★ கட்டுரை ★ சுவரொட்டி

★ போட்டிகள் அனைத்தும் மாணவர்களுக்கு வேறாகவும் மற்றையோருக்கு வேறாகவும் இரு பிரிவுகளாக நடைபெறவுள்ளது.

★ தமிழீழத்தில் அதியுயர் கௌரவமிக்க பரிசுகள் வழங்கப்படவுள்ள இப்போட்டிகளில் ஆர்வமும் ஆற்றலு மிக்க அனைவரும் கலந்துகொள்ளலாம்.

(போட்டிக்கான விதிமுறைகள் நாளை வெளிவரும்)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31- ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.